# THIRUMARAI AASAAN


**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 33 January - 2020 Issue -1**


**ஆசிரியர் உரை**

# சத்தியத்திற்குத் தூணும், ஆதாரமும்

**ப**ரலோக தேவனுடைய பேரருளால் நம் தாய் மொழியில் நாம் கொடையாகப் பெற்றுள்ள தமிழ் வேதாகமம் **சத்தியம்** என்னும் உத்தம வார்த்தைக்கு அழகான, ஆழமான பொருளைக் கொடுக்கிறது. இவ்வார்த்தைக்கான மூலமொழி மற்றும் ஆங்கில மொழி வார்த்தையின் நேரடிப் பொருள் **உண்மை** அல்லது **உண்மையான** என்பது. இவ்விருவார்த்தைகளும் அவை தரும் பொருளில் ஏற்படுத்தும் தாக்கத்தை விட **சத்தியம்** என்னும் வார்த்தையைக் கேட்கும் போதும், வாசிக்கும் போதும் ஏற்படுத்தும் அது தாக்கம் மிகவும் அதிகம். இதற்கு காரணம், சத்தியம் என்பது ஆன்ம வாழ்வோடு தொடர்புடைய ஒன்றாக இருப்பதே.

அப்படியானால், இங்கே எழக்கூடிய கேள்வி சத்தியம் என்றால் என்ன என்பதே. பொருளே தெரியாமல் பல வார்த்தைகள் பழக்கத்திலும், புழக்கத்திலும் நம் சமுதாய வாழ்க்கையில் இருப்பது போல், சத்தியம் என்னும் இவ்வார்த்தையும் நமது பக்தி வாழ்வில் இடம் பிடித்துவிட்டது. சொல் அகராதி இவ்வார்த்தைக்குத் தரும் விளக்கம் **உண்மையாயிருக்கும் ஒன்று** என்பது. இப்பொருளின டிப்படையில், பரலோக தேவன் உண்மையாயிருக்கிறார் என்பதை நாம் அறிகிறோம். இப்படி உண்மையாயிருக்கிற தேவன் சம்பந்தப் பட்ட ஒவ்வொன்றும் உண்மையாகவே இருக்கிறது. அதாவது, சத்தி யமாயிருக்கிறது. இந்த சத்திய தேவனின் வார்த்தைகள் மனிதனின் நித்திய வாழ்வோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இப்படி மனிதனு டைய நித்திய வாழ்வோடு சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள **சத்தியம்** பரி சுத்த வேதாகமத்தில் எங்ஙனம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுதென்று கவனிப்போம்.

முதலாவது, தேவன் நியாயக்கேடில்லாத **சத்திய தேவன்** (உபா:32-4). இரண்டாவது, இயேசுவானவர் **சத்தியத்தால் நிறைந்தவர், சத்தியமாயிருப்பவர்** (யோவான் 1:14;14:6). மூன்றாவது, பரிசுத்த ஆவியானவர் **சத்திய ஆவியாயிருக்கிறார்** (யோவான்.14:17,16:13). நான்காவது, தேவனுடைய **வசனம் சத்தியமாயிருக்கிறது** (யோ17:17). ஐந்தாவது, தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படி இருக்கப் போகிறது (ரோமர் 2:2); (யோவான் 12:48). இப்படி முழுக்க முழுக்க தேவனோடும், அவருடைய காரியங்களோடும் சம்பந்தம் கொண்டிருக்கும் இவ்வார்த்தையின் பொருளை உள்வாங்கியவராகத்தான் சபையானது சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது என்று பவுலடியார் பறைசாற்றியுள்ளார். தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்திற்குத் தூணும் தாரமுமாயிருக்கிறது. (I தீமோ 3:15).

தன் உத்தம குமாரர்களில் ஒருவனாகிய தீமோத்தேயுவுக்குப் பவுலடியார் ஏன் இப்படி எழுதினார் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு முன், நமது மாறாத வழக்கத்தின்படி இதன் பின்னணிக் காரியங்களுக்குள்ளாக கடந்து வந்து விடுவோம். சரியா?

மூன்று நற்செய்திப் பயணங்களை மேற்கெண்ட பவுலடியாருக்குத் தன் முதல் பயணத்தின் போது கிடைக்கப் பெற்ற நன்முத்து தான் இந்த தீமோத்தேயு. இவன் சிறுபிள்ளையாயிருக்கும் போதே, பக்தி கனலுக்கான நெருப்பு இவன் தாயாகிய ஐனிக்கேயாளாலும், பாட்டியாகிய லோவிசாளாலும் பற்ற வைக்கப்பட்டிருந்தபடியால், ஏற்ற சமயத்தில் அது கொழுந்து விட்டு எரிந்தபடியால், ஒரு மூன்று ஆண்டுகளுக்குள்ளாக இணையில்லாத தேவதாசனாகிய பவுலடியாருக்கு ஊழியக் கூட்டாளியாக இவன் மாறிவிட்டான். இதை நாம் லேசாகக் கருதிவிடக்கூடாது. ஏனெனில், இரண்டாம் நற்செய்திப் பயணதிற்கு யோவான் மாற்குவைக் கூட்டிப் போகலாம் என்று பர்னபா சிபாரிசு செய்த போது **ஊழியத்திற்கு அவன் சரியான நபர் அல்ல** என்று கறாராகப் பேசி கைவிரித்தவன் தான் இந்தப்பவுல் (அப் 15:36-39). ஆனால், இதே பவுல் இளம் கிறிஸ்தவனாகிய தீமோத்தேயுகை ஊழியக் கூட்டாளியாகச் சேர்த்துக் கொள்கிறார். புரிகிறதா? தீமோத்தேயு தன்னை எந்தளவு குறுகிய காலத்தில் தகுதிபடுத்திக் கொண்டான் என்று. அத்தோடு அவருடைய ஒட்டுமொத்த நம்பிக்கைக்குரிய நபராகவும் மாறிவிட்டான். ஆம், **என்னைப் போல் மனதுள்ளவன் என்றும், கிறிஸ்துவுக்குரியவைகளைத் தேடுபவன்** என்றும் எழுதி பெருமைப்படுத்துகிறார் (பிலி 2:19,20). இப்படி ஊழியக் கூட்டாளியாகவும், நம்பிக்கைக்குரியவனாகவும், கிறிஸ்துவுக்குரியவைகளைத் தேடுபவனாகவும் இருந்த தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபத்தில் தான் சபையானது சத்தியத்திற்கு தூணும், ஆதாரமாயிருக்கிறது என்று வெளிப்படுத்துகிறார்.

சரி,ஊழியப் பயணத்தின் ஒரு கட்டத்தில் தீமோத்தேயு எபேசு விலே விடப்பட்டிருந்தார். அப்படி, விடப்பட்ட தீமோத்தேயு எபேசுவிலே நிறைவேற்றுபடிக்கு இரண்டு பெரும் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 1. தலைதூக்கியிருந்த கள்ளப்போதகம் துப்புரவாகத் துடைத்தெறியப்பட்ட வேண்டுமென்பது 2. சபையின் ஒழுங்கு செயல்பாடுகளின் நெறிமுறைகளும், சபையின் ஆளுகை அமைப்பும் நிலை நாட்டப்பட்ட வேண்டுமென்பது. ஆம், உபதேசக் காரியங்களுக்கும்,ஒழுங்கு செயல்பாட்டுக்கும் தேவன் எவ்வளவு முக்கியத்துவம் தந்துள்ளார் என்று பாருங்கள். ஒருவேளை இன்றைய ஊழியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இவை முக்கியமில்லாம லிருக்கலாம். ஆனால், தேவனுக்கு இவ்விரண்டும் மிகவும் முக்கியம். சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஆனால், எந்த ஒரு சபையிலும் உபதேசம் சார்ந்தும், ஒழுங்கு செயல்பாடுகள் சார்ந்தும் தேவன் பிரியப்படும் அளவில் காரிய மாற்றுவது மிகவும் சவாலானது. எதிர்ப்புகளையும், ஏளனங்களையும் எதிர்கொள்ள நேரிடும். இதை உணர்ந்துதான் ஆவியின் ஏவுதலால் பவுலடியார் இரண்டு முக்கியமான வார்த்தைகளைப் பயன்படுத்தி யுள்ளார். 1. **கட்டளை** 2. **ஜாக்கிரதை.** இந்த இரண்டு சத்தான வார்த்தைகளைத் தீமோத்தேயுவுக்கு பயன்டுத்தும் முன், பவுலாகிய நான் தேவனிடத்திலிருந்வு எனக்காக **கட்டளை** பெற்றிருக்கிறேன்.( 1:1) என்பதைத் தெளிவுபடுத்திவிட்டார். இதன் மூலம் பவுல் இடும் கட்டளைகள் குறித்து தீமோத்தேயு கேள்வி எழுப்ப முடியாது.

முதலாவது **கட்டளை.** ஒன்றாம் அதிகாரம் வசனம் 3-ல் உள்ள உபதேசம் சார்ந்த கட்டளை உள்ளது. ஆம், வேற்றுமையான உபதேசங்களுகக்கும், கட்டுக்கதைகளுக்கும் செவி சாய்க்கும் சிலருக்கு எதிரான கட்டளை. அத்தோடு, இக்கட்டளையை நிறை வேற்றப் போராடும்படி தீமோத்தேயுக்குக் கட்டளை ( 1:18) பிறகு, ஒழுங்கு செயல்பாட்டுக்கான காரியங்களைப் போதிப்பதில், தன் வயதின் காரணமாகச் சோடைபோய்விடக் கூடாது என்பதற்கான கட்டளை. (4:11). இறுதியாக, ஐசுவரிவான்கள் நித்திய ஜீவனுக்கான சிந்தையைப் பெற்றுக் கொள்ளும்படி கட்டளையிடக் கட்டளை (5:19).

அடுத்த முக்கிய வார்த்தை **ஜாக்கிரதை**, பிறருக்குக் கட்டளையி டுகிறவனும், புத்தி சொல்கிறவனும் தங்கள் பங்கில் சரியானவர் களாகக் காணப்படுவது அவசியம். ஆகவே தான், நீ விசுவாசமும், நல்மனசாட்சியும் உடையவனாயிரு என்று குறிப்பிடுகிறார் (1:19)ல். இன்னும், 4:12 ல் உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும் நடக்கையிலும், அன் பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு என்கிறார்(4:12). மேலும், 5:22-ல், தீமோத்தேயுவே **உன்னைச் சுத்தவானாகக்** காத்துக் கொள் என்றும் ஒரு போடு போடுகிறார்.

கட்டளை, ஜாக்கிரதை ஆகிய இந்த இரண்டு வார்த்தைகள் ஊழியக் காரியங்களில் மாயமாய் மறைந்து விட்ட படியால்தான், இன்றைய கிறிஸ்தவம் சீரழிவான நிலையில் தள்ளாடிக் கொண்டிருக்கிறது. சத்திய வார்த்தைகளின் போதனைகள் புறக்கணிக்கப்படும்போது வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

இப்பொழுது இப்பின்னணித் தகவல்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

**1. சபையில் ஒழுங்கும், கிரமும் அவசியம்**

தேவனுடைய வீடாகிய சபை பற்றிய இப்பகுதியிலிருந்து நம்மால் முதலாவது தெரிந்து கொள்ள முடிவது, சபையில் ஒழுங்கும், கிரமும் மிகவும் முக்கியம் என்பது.

நம்முடைய தேவன் ஒழுங்கின் தேவன். சிருஷ்டிப்பின் போது ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் (ஆதி 1:2) இருந்த பூமியை ஒழுங்குபடுத்தியதே அவர் செய்த முதல் காரியம். அந்த தேவன் தான் பவுலடியாரைக் கொண்டு கொரிந்து சபைக்கு **சகலமும், நல்லொழுக்கமாயும், கிரமுமாயும் செய்யப்படக்கடவது** என்று கூறியுள்ளார் (1கொரி 14:40)

இந்த ஒழுங்கின் தேவன் தான், **தாமதிப்பேனாகில் தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை எழுதுகிறேன்** என்கிறார். அதாவது, தேவனுடைய வீடாகிய சபையை ஒழுங்கு செய்யும் பொறுப்பை ஏற்றிருக்கிற நீ, எந்தெந்த இனங்களில் கவனமாக இருக்க வேண்டுமென்பதை தெரிந்துகொள் என்கிறார். இப்படிச் செல்வதின் மூலம் இரண்டு காரியங்களை அவர் உள்ளடக்குகிறார். 1. தேவனுடைய வீடாகிய சபையில் பொறுப்பை ஏற்றிருக்கும் தீமோத்தேயுவின் தனிப்பட்ட செயல்பாடு. 2. சபையில் உள்ள மற்றவர்களில் செயல்பாடு.

தேவனுடைய வீடாகிய சபையை வழிநடத்தும் மூப்பர்களாக இருந்தாலும், அவர்களுக்கு பக்கபலமாக இருக்கும் உதவிக்காரர்களாக இருந்தாலும், பிரசங்கிக்கும் போதகர்களாக இருந்தாலும், சபையின் அங்கமான கிறிஸ்தவர்களாக இருந்தாலும் அவரவர்களுக்கான கட்டுப்பாடுகள் தேவனால் வரையறுக்கப்பட்டுள்ளது. அதைத்தான் பவுலடியார் **நடக்க வேண்டிய வகையை** என்று குறிப்பிடுகிறார். சபைக் காரியங்களில் தான்தோன்றிந்தனமாக நடப்பதற்கு யாருக்கும் உரிமையும், அதிகாரமும் இல்லை. புதிய ஏற்பாட்டில், ஆவியில் மிகவும் மேம்பட்ட சபையாகக் கருதப்படும் தெசலோனிக்கேயருக்குப் பவுல் எழுதும்போது இதே கருத்தை வலியுறுத்துகிறார். **அன்றியும், சகோதரரே நீங்கள் இன்னின்ன பிரகாரமாய்**

**நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக் கொண்டபடியே அதிகதிக மாய்த் தேறும்படிக்கு கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்தி சொல்லுகிறோம்** [I தெச 4:1] என்று.

அருமையானவர்களே! சத்திய வேதத்தின் போதனை இவ்விதம் இருக்கும் போது, இன்றைய நாட்களின் கிறிஸ்தவத்தில் காணப்படும் யதார்த்த நிலை எப்படியுள்ளது? யாருடைய கட்டுப்பாட்டில் கர்த்தரின் சபையும், சபைகள் என்று கருதப்படுபவைகளும் இயங்கிக் கொண்ருக்கிறது? சபையின் பக்திச் செயல்பாடுகளுக்கும், ஆளுகை அமைப்புக்கும் தேவனால் கொடுக்கப்பட்டுள்ள நெறி முறைகள் செயல்படுத்தப்படுகின்றனவா? நீங்களே நிதானித்துப் பாருங்கள்! நீங்கள் மனசாட்சியிலே சூடுண்டவர்களாக இல்லாதிருந்தால் வேதவசனங்களின் போதனைகள் பின்பற்றப்படுவதில் லையென்பது பளிச்சென விளங்கும்.

ஆம், எனக்கும் விளங்குகிறது. இதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் ஒருவேளை கேட்டால், இதோ அதற்கான தேவ கட்டளை. **மேலும், சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக் கொண்ட முறைமையின்படி நடவாமல் ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலகவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினாலே உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்** [II **தெச 3:8**]. இத்தேவகட்டளையை அமல்படுத்துவதா அல்லது அவமதிப்பதா என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், உங்கள் ஆத்துமாவுக்கு நீங்கள் தான் பொறுப்பு.

### II **சபை சத்தியத்திற்குத் தூணும், ஆதாரமுமாயிருக்கிறது**

தேவனுடைய வீடாகிய சபை பற்றிய இப்பகுதியிலிருந்து நம்மால் இரண்டாவதாகத் தெரிந்து கொள்ள முடிவது, சபை சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாக இருக்க வேண்டுமென்பது.

அநேகர் எண்ணுவது போல் சபை என்பது ஒரு கட்டிடம் அல்ல. அது **அழைக்கப்பட்டவர்களின் கூட்டம்.** கிறிஸ்துவின் நற்செய்தியால் அழைக்கப்பட்டு [II தெச 2:14] கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப்பட்டவர்கள் [அப் 20:28]. சீடர்கள், விசுவாசிகள், பரிசுத்தவான்கள் என்று மிக நேர்த்தியாக அழைக்கப்படும் இவர்களிடம் தேவன் கொடுத்துள்ள பொறுப்புகளில் தலையாயது சபை **சத்தியத்திற்குத்** தூணும், ஆதாரமுமாக இருக்க வேண்டுமென்பது. பொதுவாக, எந்த ஒரு கட்டிடத்தையும் தாங்கிப் பிடிப்பது அதன் தூண்களே. ஒருவேளை தூண்கள் வலிமையாக இருந்து, அதன்

ஆதாரம் பலவீனமாக இருந்து விடுமானால் ஒட்டுமொத்த கட்டிடமும் சரிந்து பெரும் நாசம் ஏற்படும். சரியான ஆதாரத்தின் மேல் கட்டப்படாத பல அடுக்குமாடி கட்டிடங்கள் விபத்துக்களை அவ்வப்போது சந்திப்பதை நாம் அறிவோம். அதுபோல, தேவனால் உலகத்திற்கு கொடுக்கப்பட்ட சத்தியத்தின் அக்கறையும் நிலை ஆகிவிடக் கூடாது என்பதே ஆவியானவரின் இக்கறை.

இங்கே, சத்தியம் இவ்வளவு முக்கியமானதா என்ற கேள்வி ஒரு வேளை எழலாம். இதற்குப் பதில் **ஆம்**, மிகமிக முக்கியமானது என்பதுதான். ஏனெனில், தேவனால் கொடுக்கப்பட்ட அவருடைய **வார்த்தைகள் தான் சத்தியமாயிருக்கிறது** (யோவான் 17:17). இன்னும் ஆத்துமாக்களை இரட்சிக்கும் வல்லமை கொண்ட அவருடைய **சுவிசேஷமும்** சத்தியமாயிருக்கிறது (கலா2:5,14). இப்படிப்பட்ட சத்தியத்தைக் கொண்டுதான் தேவன் உலகத்தை **விடுதலையாக்கும்** திட்டத்தை தீட்டியுள்ளார். **சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்** என்று (யோவான் 8:32)

சர்வவல்லவரால் இப்படியாக மேன்மைப்படுத்தப்பட்டிருக்கும் சத்தியத்தை சபையானது பிறருக்கு எடுத்துச் செல்வது அவசியம். (அப் 26:25) சபைக்காக உயிரைக் கொடுத்த இயேசு **நானே சத்தியம்** என்று கூறியுள்ளபடியால், இயேசுவின் உபதேசம் சார்ந்த கோட்பாடுகளுக்கு எவ்வித சமரசத்திற்கும் இடம் கொடுக்காமல், விளைவுகள் பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படாமல் எச்சூழலிலும் சபையானது சத்தியத்திற்குத் தன்னைக் கீழ்ப்படுத்த வேண்டும். ( I பேதுரு 1:22)

அப்படியானால் அருமையானவர்களே! இன்றைக்கு இப்படித் தான் சபையிலும், சபைகளிலும், நடந்து கொண்டிருக்கிறதா? நான் இங்கே சபை என்றும், சபைகள் என்றும் குறிப்பிடுவதைக் கவனிக்கத் தவறிவிடாதீர்கள். இயேசுவால் கட்டப்பட்டது ஒரே சபை தான் (மத். 16:18). ஏனைய அனைத்தும் மனிதர்களால் ஆரம்பிக்கப் படவை. இங்கே தேவன் சபைக்கு அளித்த இம்மாபெரும் பொறுப்பை அவருடைய சபை நிறைவேற்றவில்லையென்றால், அது தேவனுடைய பார்வையில் குற்றமுள்ள சபையாகவே இருக்கும். மனிதர்களால் ஆரம்பிக்கப்பட்ட விதவிதமான பெயர்களைக் கொண்ட சபைகள் கணக்கிலேயே வராது.

ஆகையால், நாம் அங்கம் வகிக்கும் சபையின் நிலையை றை( பார்த்து தேவனுக்கு எது பிரியமாயிருக்குமோ அதைச் செய்யத் தைரியங்கொண்டு அப்படியாகச் செய்யும் படி நாம் நம்மை ஒப்புக் கொடுப்போம்.

**111. சபையில் பரிசுத்தம், பிழையின்மை அவசியமாயிருக்கிறது.**

தேவனுடைய வீடாகிய சபை பற்றிய இப்பகுதியிலிருந்து நம்மால் தெரிந்து கொள்ள முடிகின்ற இன்னொன்று, சபை பரிசுத்தமும், பிழையற்றதுமாய் இருக்க வேண்டு மென்பது.

பரிசுத்தம் பற்றி பேதுரு சிதறிப்போய் தங்கள் விசுவாசத்தினிமித்தம் பாடுகளை அனுபவித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதின முதலாம் நிருபத்தில், உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள். (I பேதுரு. 1:15)என்று கூறியுள்ளார். அதாவது, கிறிஸ்தவர்களாயிருப்பதினிமித்தம் எதிர்கொள்ள நேரும் சோதனைகளோ, கிறிஸ்துவுக்காகப்படும் உபத்திரவங்களோ உங்கள் பரிசுத்த வாழ்வுக்கு உளை வைத்துவிடக்கூடாது என்கிறார். பரிசுத்தத்தை காப்பாற்றுகிற காரியத்தில் நீங்கள் உங்களை சக கிறிஸ்தவர்களோடு ஒப்பிட்டு பொய்யாக திருப்திப்பட்டுக் கொள்ளாமல், உங்களை அழைத்த தேவன் பரிசுத்தர் என்பதை எப்பொழுதும் மனதிற்கொண்டு செயற்பட வேண்டுமென்று வலியுறுத்துகிறார். எப்படி விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியமோ (எபி 11:6) அதுபோல, பரிசுத்தமில்லாமல் இழந்து தேவனுக்கு உகந்தவர்களாக இருப்பதும் கூடாத காரியமே.

அடுத்து பிழையின்மை: அப்போஸ்தலன் பவுலடியார், பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு எழுதும்போது ''நீங்கள் ...இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும், இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன் என்கிறார்.(பிலி 1:10,11)

அதாவது, குற்றமற்றவர்களாகவும், இடறலற்றவர்களாகவும் இருக்க வேண்டுமென்று மாத்திரம் சொல்லாமவு அதற்கான காரணத்தையும் கொடுக்கிறார். கிறிஸ்துவின் நாளுக்கென்று பரிசுத்தம் காக்கப்பட வேண்டும் என்று. அப்படியானால், கிறிஸ்துவின் நாளுக்காக குற்றமற்ற தன்மையும், இடறலற்ற தன்மையும் ஏன் அவசியமாகிறது? கிறிஸ்துவானவர் தம்மைப் பலியாக ஒப்புக் கொடுத்ததே இதற்காகத்தான். ஆம், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கே தம்மை ஒப்புக் கொடுத்தார். (1 கொரி 15:24)

ஆக, கர்த்தருடைய சபை இரண்டு பிரதான காரணங்களுக்காக **பரிசுத்தமாகவும், பிழையற்றதாகவும்** இருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது.

1. கிறிஸ்துவின் சத்தியத்தை தாங்கிப் பிடித்து உலகிற்கு எடுத்துச் சொல்லி, உலகத்தைப் பாவத்திலிருந்து இரட்சிக்கும் பொறுப்பைப் பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட சபை பரிசுத்த குலைச்சலாலும், பாவத்தாலும் தீண்டப்படுமானால், உலகை இரட்சிக்கும்படியான

தேவத்திட்டம் பாழாகிவிடும்.2. பரிசுத்தமும், பிழையற்றதும் மகிமையுமுள்ள சபையாக, அதாவது தேவனுடைய எல்லா எதிர் பார்ப்புகளையும் நிறைவேற்றின கிறிஸ்தவர்களாக இருந்தால்தான் இயேசு கிறிஸ்து நம்மை அந்த மகா நாளில் தமக்கு முன் நிறுத்திக் கொள்வார். புரிகிறதா? புரியாவிட்டால் இன்னொரு கருத்தை கவனியுங்கள். பரிசுத்த ஆவியானவர் தம்முடைய தாசரைக் கொண்டு சபைகளுக்கும், தனிப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும் எழுதின நிருபங்களின் வேறுபாட்டைக் கவனித்தால் தனிப்பட்ட வர்களுக்கான நிருபங்களில், **கிருபையும், இரக்கமும், சமாதான மும்** உண்டாவதாக என்று ஆரம்பத்தில் இருக்கும் (1தீமோ 1:2;தீத்து 1:2). அப்படியே, சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங் களைப் படியுங்கள் **கிருபையும், சமாதானமும்** உண்டாவதாக என்றே இருக்கும் (1கொரி 1:3;கலா 1:3; எபே 1:2). ஏன் இந்த வேறு பாடு? தனிப்பட்ட மனிதன் பெலவீனங்களுக்கு உட்பட்டவன். ஆகவே, அவனுக்கு இரக்கத்திற்கு வாய்ப்புண்டு. ஆனால், சபை குறைகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார்.

ஆகையால், அருமையானவர்களே! நீங்கள் கிறிஸ்து கட்டின சபையில் அங்கமாக இருந்தால் மகிழ்ச்சி. சத்தியத்திற்குத் தூணும், ஆதாரமுமாக இருக்கும் மாபெரும் பொறுப்பை தேவன் உங்களிடமும் கொடுத்துள்ளார். ஒருவேளை, நீங்கள் கிறிஸ்து வின் சபையில் அங்கமாக இல்லாமலிருந்தால், முதலாவது நீங்கள் கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்படிந்து கிறிஸ்துவால் அவருடைய சபையில் சேர்க்கப்பட்ட உங்களை ஒப்புக் கொடுங்கள். அப்பொழுதுதான் கிறிஸ்துவின் சத்தியத்தை தாங்கிப் பிடிக்கும் பணியில் உங்களை இணைத்துக் கொள்ள முடியும். கிறிஸ்துவின் சபைக்கு வெளியே இருந்து கொண்டு நீங்கள் அதைச் செய்யவே முடியாது. இதை உணர்ந்தவர்களாக நாம் ஒவ்வொருவரும் இப்புதிய ஆண்டின் ஆரம்பத்திலிருந்து செயல் படுவோம்! ஆமென்!! ✝

---

**கர்த்தாவே நான் ஒளிவீசும் விளக்காக இருக்கட்டும். அதனால் மற்றவர்கள் என் சொல்லிலும், செயலிலும் உம் இரக்கத்தையும், உம் அன்பையும் என்னில் காணட்டும்.**

# உங்கள் கேள்வித்திறன் எப்படி?

Bro. J.C. **சோட்**

**ஒ**ருவருடைய சரீரப்பிரகாரமான கேள்வித்திறனைப் பற்றியது இக்கேள்வி என்று இத்தலைப்பைப் பார்த்து நீங்கள் முடிவுக்கு வரலாம். ஆனால், அப்படி நீங்கள் நினைத்திருந்தால் உங்கள் எண்ணம் தவறானது. நான் இங்கே கேள்விப்படுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக இக்கேள்வியைக் கேட்கிறேன். சரியான காரியங்களைக் கேள்விப்படுவது எவ்வளவு அவசியமானது என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? இதைக் குறித்து நீங்கள் சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் எதைக் கேட்கிறீர்களோ, அது உங்கள் விசுவாசத்தைத் தீர்மானிக்கிறதாக இருக்கிறது. ஆகையால், நீங்கள் சத்தியத்தை விசுவாசிக்க வேண்டுமென்றால், சத்தியத்தைக் கேட்கவேண்டும். அதே வேளையில் நீங்கள் பொய்யானவைகளைக் கேட்பீர் களென்றால், பெரும்பாலும் அதைத்தான் விசுவாசிப்பீர்கள். இது மிகவும் சுலபமானதாகும்.

நம் வாழ்க்கையில் நாம் எதைக் காண்கிறோமா, எதைக் கேட்கிறோமோ எதைப் புரிந்து கொள்ளுகிறோமோ எதை ஏற்றுக் கொள்ளுகிறோமோ அவைகளாகவே பெரும்பாலும் இருக்கி றோம். நாம் உண்மையென்று எதை ஏற்றுக்கொள்ளுகிறோமோ அதன் உண்மைத் தன்மையை சரியாக விசாரிக்க வில்லையென்றால் ஒரு பொய்யை எப்படி விசுவாசிக்கிறோமோ அதேபோல் தான் உண்மையையும் விசுவாசிக்கிறவர்களாக இருப்போம்.

மதத்தின் பெயரால் ஏன் இத்தனை முரண்பாடான உபதேசங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏன், அநேக ஜனங்கள் எல்லா சபைகளும் ஒன்றுதான் என்று நினைகிறார்கள்? கிறிஸ்துவின் நாமத்தை விட்டு விட்டு சபைகளுக்கு ஏன் மதசம்பந்தமான பெயர்கள் வைக்கப்படுகிறது? ஏன் இத்தனை பிரிவுகள் காணப்படுகிறது? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் ஒன்றுதான். பெரும்பான்மையான மக்களுக்கு இவைகள் சத்தியம் என்று போதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களும் சத்தியத்தின் உண்மைத் தன்மையை ஆராயாமல், அதை அப்படியே ஏற்றுக்

கொண்டிருக்கிறார்கள். வேறு விதமாகச் சொன்னால் அவர்கள் எதை விசுவாசிக்கிறார்களோ அதிலே அப்படியே இருக்கிறார்கள். அவர்களுக்கு இவ்விதமாகப் போதிக்கப்பட்டபடியால் அவர்கள் அதை விசுவாசிக்கிறார்கள்.

நாம் மதசம்பந்தமான காரியங்களில் சரியாக இருக்க வேண்டுமென்றால், நாம் தீமையானவைகளையல்ல, சரியானவைகளையே கேட்பதற்கு உறுதியெடுக்க வேண்டும். நாம் மனிதன் மீது நம்பிக்கை வைப்பதைவிட, தேவன் மீது அதிக நம்பிக்கை வைக்க வேண்டும். ஏனென்றால், தேவன் நமக்கு என்ன சொல்லுகிறார் என்பதை உறுதி செய்ய வேதாகமத்தை அனுதினமும் வாசித்து, அதை அப்படியே விசுவாசித்து அதன்படி செய்யவேண்டும். தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பதினால் மாத்திரமே உண்மையான விசுவாசம் உண்டாகும் (ரோமர் 10:17). இதினிமித்தம் கிறிஸ்துவின் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிவதின் மூலமாக இரட்சிப்பு உண்டாகிறது (எபி.5:8,9; மாற்கு 16:16).

நாம் எந்த அளவு சத்தியத்தைப் பேசுகிறோமோ அந்த அளவு உலகம் அதை விசுவாசிக்கும். ஒரு தனி நபராக நீங்கள் இதை எப்படிப் பார்க்கிறீர்கள்? உங்களுக்கு எவைகள் போதிக்கப் பட்டிருக்கிறது என்பதைக் குறித்து ஆழமாகச் சிந்தித் திருக்கிறீர்களா? நீங்கள் எவைகளைக் கேட்கிறீர்களோ அவைகளைக் கூர்ந்து கவனிக்கிறீர்களா? நீங்கள் எவைகளைக் கேட்கிறீர்களோ அவைகளை ஜாக்கிரதையாகக் கவனித்து அதை ஆழமாகப் படித்து, ஆராய்ந்து ஒப்பிட்டுப்பார்த்து, கேள்வி கேட்டு நீங்கள் விசுவாசிக்கும் காரியத்தை இது உண்மைதான், உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை என்பதை நிச்சயித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், நாம் கேட்கும் உண்மை சத்தியத்தை துருவித் துருவி சோதித்துப் பார்த்தாலும் அந்த சோதனைகளில் எல்லாம் உண்மை சத்தியமானது நிலைத்து நிற்கும். ஆகையால், நீங்கள் எதை விசுவாசிக்கிறீர்களோ அதை ஆராய்ந்து பாருங்கள். அதை வேதவசனங்களோடு ஒப்பிட்டுப்பாருங்கள். ஏனென்றால், நீங்கள் இதற்கு முன்பு தவறான சத்தியத்தை ஏற்றுக் கொண்டிருந்தால், அதை விட்டு விட்டு உண்மைச் சத்தியத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். கடந்த காலத்தில் தவறு செய்திருக்கிறோம் என்பதை ஒத்துக்கொள்வது கடினமானதுதான். ஆனாலும், நீங்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும்போது தான் இரட்சிக்கப்பட முடியும். எனவே, நீங்கள் எதைக் கேட்கிறீர்கள் என்பதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ✝

பெண்கள் பகுதி

# ஒரே சிந்தை

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**க**ர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும், சிந்திகேயாளுக்கும் புத்தி சொல்லுகிறேன் (பிலி:4:2).

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துக்கள். மற்றுமொரு புதிய ஆண்டை கூட்டி வழங்கிய தேவனுக்கு நன்றி சொல்லுவோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் ஐரோப்பாவில் சுவிசேஷத்தை பிரசங்கித்த போது அதை கேட்டு முதல் முதல் கீழ்ப்படிந்து கிறிஸ்தவர்களானவர்கள் லீதியாளும், அவள் வீட்டாரும் என்று நாம் அறிவோம். அவர்கள் மூலமாக பிற்காலத்தில் மிகவும் போற்றப்படும் பிலிப்பு பட்டணத்து கிறிஸ்துவின் சபை ஆரம்பத்திற்கு மூல காரணமாக இருந்தவர்கள் இந்த லீதியாளும், குடும்பத்தாரும் தான். பவுல் அப்போஸ்தலனை கவனித்து உபசரித்து, தேவைப்படும்பொழுது பொருளாதார உதவிகள் செய்து இப்படி லீதியாள் பல கோணத்தில் சபைவளர்ச்சிக்கு உதவியாயிருந்ததினால் பவுல் அந்த சபையை தலையில் தூக்கி வைத்து எனக்கு சந்தோஷமும், கிரீடமுமானவர்களே என்று பேரின்பம் அடைவார். பவுலடியார் சிறையில் இருந்து இந்த பிலிப்பியர் நிருபத்தை எழுதினாலும் மிகவும் பாராட்டி மகிழ்ச்சியாய் அவர்கள் நற்பண்புகளை வெளிக்கொணர்ந்து எழுதினாலும் சபையில் இருக்கிற இந்த ஸ்திரீகள் கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க புத்தி சொல்லுகிறேன் என எழுதுகிறார். எந்த விஷயத்தில் அவர்கள் சிந்தை மாறுபட்டிருந்தது என்று பவுலடியார் சொல்லாவிட்டாலும் இந்த நிலை சபைக்குள் இருப்பது கூடாது மற்றும் இது பாவமான செயல் என்பதால் உடனே இது சரி செய்யப்பட வேண்டும் என்று எண்ணினார். சமாதானம், ஒரு மனம் கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியில் நிலவ வேண்டும். எனவே, அதைப்பற்றி வேதத்தின் துணை கொண்டு சில பாடங்களை கற்று கடைபிடிப்போம்.

பிரியமானவர்களே! இன்றைக்கு குடும்பம், பிள்ளைகள் சபை இம் மூன்றிலும் பல பிரச்சனைகள் வருவதற்கு முழுமுதற்காரணம் கர்த்தருக்குள் ஒரே சிந்தையாய் இராதுதன்.

I.தேவன் தம்மை பின்பற்றுகிற யாவரும் விசுவாசத்தில் ஐக்கியமாயிருக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்திருக்கிறார். ஆவிக்குரிய விஷயங்களில், அதாவது வசனங்களை ஏற்று கடைபிடிக்கும் விஷயங்களில் ஒரே மனம் இல்லாதபோது தேவன் அதில் பிரியப்படுவதேயில்லை. கிறிஸ்து யோவான் (17:21)-ல் ஐக்கியத்திற்காக இயேசு ஜெபித்திருக்கிறார். தேவன் குழப்பத்திற்கு காரணரல்ல. எனவே குழப்புவது நாம் தான். இயேசு ஐக்கியத்திற்காக ஜெபித்ததோடல்லாமல் ஒரே சபையைக் கட்டுவதாக வாக்களித்தார். (மத்.16:18). அவருடைய உயிர்தெழுதலுக்குப் பிறகு முதல் பெந்தகொஸ்தே நாளில் அதை நிறைவேற்றியும் விட்டார். இந்த விசுவாச கூட்டமைப்பு எப்படி உருவாகும்? எல்லோரும் வித்தியாசம், வித்தியாசமான உபதேசங்களை சொல்லி அதன் கலவையை எல்லோரும் கடைபிடித்தால் அது ஒரே சிந்தையாகி விடாது. இன்று பல கூடுகைகள் இப்படித்தான் கூடிக் கொண்டிருக்கின்றன. ஒரே சிந்தைக்கு தேவன் ஒரே அடிப்படைக் கருத்தைத்தான் கொடுத்தி ருக்கிறார். **ஆகிலும், நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அது முதல் ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு ஒரே சிந்தையா யிருப்போமாக** (பிலி:3:16).

II. **தேவன் சபைக்குள்ளே சமாதானம் இருக்க வேண்டும் என்று கற்றுக் கொடுக்கிறார்.** எயோதியாளும், சிந்திகேயாளும் கிறிஸ்து வின் சபையின் அங்கமாக இருந்தார்கள். ஒரே விசுவாசம் ஒரே தேவனை ஆராதித்தார்கள். ஆனாலும், உள்ளத்திலோ மிகவும் தூரத்தில் இருந்தார்கள். அவர்களுடைய நோக்கத்திலும், செயல் பாடுகளிலும் வித்தியாசம் காணப்பட்டது. இன்றைக்கும் ஒன்றாக கூடவே இருப்பவர்களிடமும் இந்நிலை காணப்படுகிறது. எவ்வளவு காலம் மனுக்குலம் வாழ்கிறதோ அவ்வளவு காலம் இப்பிரச்சனை இருக்கத்தான் செய்யும். ஆனால், சமாதானம் நிலவுவதற்காக தொடர்ந்து பிரயாசப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். உபதேசக் காரியம் முக்கியம். இதில் மாற்று சிந்தையை ஏற்றுக் கொள்ளவே முடியாது. எவ்விலை கொடுத்தும் ஒரே உண்மைக்காக பாடுபட வேண்டும். சிறிய சிறிய காரியங்கள் ஒரே சிந்தையை கெடுத்து விடுகின்றன.

சமாதானமாயிருப்பது சற்று கடினம்தான். **கூடுமானால் யாவரோடும் சமாதானமாயிருங்கள்**(ரோமர் 12:18) என்று வாசிக்கிறோம். சமாதானம் என்று கூறும்போது எல்லாத்

தவறுகளையும் ஆதரித்து, அநுசரித்து சமாதானமாயிருப்பதை இயேசு கிறிஸ்து போதிக்கவில்லை. அதை அவர் சொல்லும்போது **பூமியின்மேல் சமாதானத்தை அனுப்ப வந்தேன். எப்படியெனில் மகனுக்கும் தகப்பனுக்கும் மகளுக்கும், தாய்க்கும், மரு மகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன். ஒரு மனுஷனுக்குச் சத்துருக்குள் அவன் வீட்டாரே. தகப்பனை யாவது, தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல. மகனையாவது** என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல (மத்:10:34-37).

அருமையானவர்களே என்னவிலை கொடுத்தேனும் கிறிஸ்துவின் உபதேசத்தின்படி வாழ வேண்டும் என்பதுதான் இங்கே நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம். நம் பிள்ளையோ, குடும்பமோ யாராயிருந்தாலும் நம் விசுவாசத்திற்கு தடையாய் இருக்க அனுமதிக்க கூடாது. **அன்றியும், கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப் படுவார்கள்** (111 தீ::3:12) மேலும், தீமை செய்து பாடநுப விப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மை செய்து பாடநு பவிப்பதே மேன்மையாயிருக்கும் (11பேது:3:17). சில நேரங்களில் நல்ல மனிதர்கள் கூட இசைந்து வேலை செய்ய முடியாத நிலை வந்து விடுகிறது. பவுலும், பர்னபாவும் இதற்கு உதாரணம். (அப்.15:36-40). ஆனால், அன்றைக்கு கர்த்தருடைய சபைகளில் பிரிவினை உண்டாக்குவதற்கு இந்தச் சூழலைப் பயன்படுத்து கின்றனர். அது கண்டிப்பாகப் பாவம்.

அன்பானவர்களே, பாராட்டுக்குரிய பிலிப்பி சபையில் கர்த்தருக்கடுத்த சிந்தையில், அதிலும் விசேஷமாக இரு பெண்களுக்கிடையே சிந்தை மாறுபட்டு விடக் கூடாதென்பதில் பவுலடியார் கருத்தாய் இருந்து இரு பெண்களுக்கும் புத்தி சொல்கிறார். நான்கு அதிகாரங்களில் மொத்தம் 10 முறை சிந்தையைப் பற்றி பேசும் பவுல் 8வது சிந்தையாக **கர்த்தருக்குள் ஒரே சிந்தை** என்பதை பெண்களுக்கு சொல்லியிருப்பதினால் அன்பான சகோதரிகளே நாம் அதை நமக்காக எடுத்துக் கொண்டு இந்த ஆண்டில் வாழ ஜெபத்தோடு முயற்சிப்போம். தேவன் அதற்கு உதவி செய்வாராக! ஆமென். ✝

# சாக்கு போக்குச் சொல்ல இடமில்லை.

Dr. **ஏபில் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான வாலிப சகோதரர்களே! உங்கள் யாவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். தேவனுடைய கிருபையும், இரக்கமும் தயவும், அவருடைய அன்பும் ஆசீர்வாதமும் இந்த ஆண்டில் உங்கள் ஒவ்வொருவருக்கும் நிறைவாய் கிடைப்பதாக. மீண்டும் உங்களை இந்த இதழின் மூலம் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் ஒவ்வொரு வரும் இந்த ஆண்டில் உங்கள் சபைகளுக்குத் தூணும், அரணு மாக இருந்து சபை வளர்ச்சியிலும், சபையின் பிற காரியங்களிலும் உறுதுணையாக இருந்து நன்றாய் செயல்படுமாறு உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

பிரியமானவர்களே, ஒரு நல்ல கிறிஸ்தவனின் அடையாளம், அவனது வளர்ச்சியாகும். இரட்சிக்கப்பட்ட நிலையிலிருந்து வளர்ச்சியே இல்லாமல் இன்னும் **பாலுண்கிறவர்களாக** இருப்பது ஒரு நல்ல கிறிஸ்தவனின் அடையாளம் அல்ல. அது தேவனுக் கும் பிரியமான ஒன்றும் அல்ல. நல்ல கிறிஸ்தவனிடம் சீரான வளர்ச்சி காணப்பட வேண்டும். தீமோத்தேயுவுக்கு பவுல் சொல்லும் போது 1தீமோ.4:15ல் **நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும் படி....** என்று சொல்லி, தீமோத்தேயு வளர வேண்டும் என்று அறி வுறுத்துகிறார். எபேசியருக்கு பவுல் எழுதின நிருபத்திலே எபேசு பட்டணத்தின் கிறிஸ்தார்களுக்கு அவர் சொல்வதை கவனியுங் கள். எபேசியர் 4:15 ல் **அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவின் எல்லாவற்றிலேயும் நாம் வளருகி றவர்களாயிருக்கும்படி அப்படிச் செய்தார்.** எனவே, எந்த ஒரு கிறிஸ்தவனுக்கும் வளர்ச்சி என்பது இன்றியமையாததாய் இருக்க வேண்டிய ஒரு குணாதிசயம்.

அப்படியென்றால், வளருவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? முதலாவது, நாம் நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும்; தகுதி படுத்த வேண்டும். நாம் நம் மனதளவிலே ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும். ஏனென்றால், வளர்ச்சி என்பது ஒரு அன்றாட நிகழ்வு. வாரம் ஒரு முறையோ, மாதம் ஒரு முறையோ, அல்லது வருடத்திற்கு ஒரு முறையோ நடக்கும் நிகழ்வு அல்ல.

ஒவ்வொரு நாளும் படிப்படியாக நம் வளர்ச்சி இருக்க வேண்டும். அது ஓர் அன்றாட நிகழ்வு என்பதால் நிச்சயமாகவே நாம் நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்; தகுதி படுத்திக் கொள்ள வேண்டும். 2தீமோ:2:2வில் சொல்லப்பட்டபடி எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டது மான கனத்துக்குரிய பாத்திரமாக மாற வேண்டும். நாம், நம் தேவ னுக்கு உபயோகமான ஒரு பாத்திரமாயிருக்க நம்மை ஆயத்தப்ப டுத்திக் கொள்ள வேண்டும்.

வாலிபர்களே! **முதலாவது** தேவனோடு நமக்கு இருக்கும் உறவை நாம் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் அவரில் வேரூன்றி இருக்க வேண்டும். தேவனைப் பற்றிய அறிவை அடைந்தால் மட்டும் போதாது. அவரோடு நாம் ஒரு இணைபிரியா உறவை ஏற்படுத்தித் கொள்ள வேண்டும். எப்படி, சரீரப்பிரகாரமாக தந்தையிடம் நமக்கு உறவு இருக்க வேண்டுமோ அப்படி. அந்த உறவு ஒவ்வொரு நாளும் வளர வேண்டும். முதலாம் சங்கீதத்தில் நாம் வாசிக்கிறோம் அல்லவா அதுபோல தேவனோடு நாம் வைத் திருக்கும் உறவு அனுதினமும் வளர வேண்டும். இரவும், பகலும் அவருடைய வேதத்தில் பிரியமாயிருந்து தியானிக்க வேண்டும்.

சங்கீதக்காரனாகிய தாவீதின் சில வசனங்களை வாசிக்கும் பொழுது, தனக்கும், தேவனுக்குமான உறவை அழகாக வெளிப்படுர யிருக்கிறதை கவனிக்க முடியும். தன் இயலாமையையும், புத்தியீனத்தையும், அவமானத்தையும், குற்றங்களையும் தேவன் அறிந்துக்கிறார் என்று சொல்லுகிறார் ( சங்31:7; 69:5;69:19) அப்படியென்றால், தாவீது தன்னைப்பற்றி அனைத்தையும் தேவனுக்கு தெரியப்படுத்தியிருக்கிறார். **அனு தினமும்** தேவனோடு நாம் தனிமையில் நேரம் ஒதுக்கி உரையாட வேண்டும். தேவனிடம் நம் காரியங்கள் ஒவ்வொன்றையும் பணிவோடு சொல்லவேண்டும். அது, நாம் ஆவியில் வளருவதற்கு பிரயோஜனமாய் இருக்கும் தேவனோடு சரியான உறவில்லாமல் நாம் வளரமுடியாது ஜீவ ஒளியை நாம் பெற்றுக்கொண்டால் மட்டுமே அதை பிரதிபலிக்க முடியும். தேவனோடு சரியான உறவு இல்லாமல் நாம் ஜீவ ஒளியை பெறமுடியது. பெற முடியாமற்போனால் பிரதிபலிக்கவும் முடியாது. இதை பிரதிபலிக்க நம்மால் கூடாது.

எனவே, இந்த புதிய ஆண்டில் நீங்கள் அனுதினமும் தேவனோடு உரையாடவும், உறவாடவும் உங்களை உற்சாகப்படுத்துகிறேன் நிச்சயம் அது நமக்கு உதவியாயிருக்கும்.

**இரண்டாவது,** நாம் நன்றாய் வளர நாம் சபை மக்களோடு நமக்கு இருக்கும் உறவை பெலப்படுத்திக் கொள்ள வேண்டும் Iதெசலோனினகேயர் 4:9 –10 ஆகிய வசனங்களை நாம் வாசிக்கும்போது, சகோதர சிநேகத்தில் '' இன்னும் பெருகும்படி'' அறிவுரை வழங்கப்பட்டிருப்பதைப் பார்க்க முடியும். நன்றாக கவனித்தால், வச:10ன் முற்பகுதியில் அந்த சபையார் சகோதர சிநேகத்தில் நன்றாய் செயல்பட்டிருந்தாலும், இன்னும் பெருகும்படி அறிவுரை வழங்கப்படுகிறது.

அப்படியென்றால், தனி நபர் வளர்ச்சிக்கும், சபையின் ஒட்டு மொத்தவளர்ச்சிக்கும், சகோதர சிநேகமும், ஐக்கியமும் எவ்வளவு முக்கியம் என்பதை கவனியுங்கள். I பேதுரு 1:22 ல் ''சுத்த இருதயத்தோடே ஒருவொரிலொருவர் ஊக்கமாய் அன்பு காட்டுங்கள் என்று வாசிக்கிறோம். அதே கருத்தை I பேது 4:8 லும் வாசிக்க முடியும்.

அன்பில் தேர்ந்த ஒரு சிறந்த ஆவிக்குரிய கூட்டத்தில் ஒருவர் ஐக்கியமாயிருந்தால் அது அவரின் வளர்ச்சிக்கு பேருதவி யாயிருக்கும். எனவே, நாம் நம் சபையில் பிறரிடம் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருப்போம். அது நம் வளர்ச்சிக்கும், பிறருடைய வளர்ச்சிக்கும் பிரயோஜனமாயிருக்கும். நாம் ஒருவருக்கொருவர் என்ன செய்யவேண்டும் என்று கற்பிக்கப்பட்டிருக்கிறோம். ரோமர் 15:7ல் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். எபேசியர் 4:2 ல் ஒருவரையொருவர் தாங்க வேண்டும். கொலோ : 3:13 ல் ஒருவரையொருவர் மன்னிக்க வேண்டும்; தெசலோ 4:18– ல் ஒருவரையொருவர் தேற்ற வேண்டும். 1 பேதுரு 4:9 ல் ஒருவரையொருவர் உபசரிக்க வேண்டும். நமக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே, சபைக்கு போனால் மட்டும் போதும் என்று நினைப்பதும், வேறெந்த சபை செயல்பாடுகளில் ஈடுபடாமலிருப்பதும் தவறானது. மேலும், அது நம் வளர்ச்சிக்கும் உதவாது. நம் சகோதரரின் வளர்ச்சிக்கும் பயன்படாது.

பிரியமானவர்களே! வாலிபர்களாகிய நாம் நிச்சயம் வளர வேண்டும். தேவனின் எதிர்பார்ப்பு. இது, அந்த எதிர்பார்ப்பை நாம் ஒவ்வொருவரும் நிறைவேற்ற வேண்டும். இந்தப் புதிய ஆண்டில் நாம் இன்னும் வளர, பிறரை வளர வைக்க ஒரு முடிவெடுப்போம். தேவனோடு நம் உறவை மேம்படுத்திக் கொள்வோம்! சபையோடு நம் ஐக்கியத்தை உறுதி படுத்திக் கொள்வோம்!! தேவன் தாமே நம்மை வெற்றியாய் வழிநடத்துவராக!ஆமென்!! ✝

சிறுவர் பகுதி

# ஒரு புதிய மாற்றம்

Dr. பிரெய்ஸி

ஹலோ குட்டீஸ், உங்களை இப்புதிய 2020 ஆண்டில் இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே வரவேற்கிறேன். இப்புதிய ஆண்டில் கர்த்தரின் சித்தப்படி சந்தோஷம், சமாதானம், நல்ல சுகம் மற்றும் வெற்றி அடைய வாழ்த்துகின்றேன்.

கடந்த வருடம் நாம் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறோம் என்று கற்றுக் கொண்டோம். அதன்படி, நீங்கள் உங்கள் நண்பர்கள் மத்தியிலே சிறந்த உதாரணமாக இருப்பீர்களென நம்புகிறேன். இப்புதிய வருடத்தில் நல்லொழுக்கமாய் நல்ல செயலுடன் கர்த்தரின் பார்வைக்கு சரியான காரியத்தைச் செய்யவும் கர்த்தரிடம் மன்னிப்பு கேட்கும் ஒரு கள்வன் பற்றி உங்களுக்கு சொல்ல போகின்றேன்.

அக்கள்வன் பற்றி நாம் லூக்கா 23:39–43 வசனங்களில் வாசிக்க முடியும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம் பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்ட போது, குற்றவாளிகளாகிய வேறே இரண்டுபேர், அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும், இடது பக்கத்தில் ஒருவனுமாக சிலுவையில் அறையப்பட்டிருந்தனர். இவ்விரண்டு பேரில் வலது பக்கத்தில் இருந்தவன் தன் மரணத்தின் கடைசி நிமிடத்தில் தன் பாவத்தை உணர்ந்து இயேசுவை நோக்கி; ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என வேண்டிக் கொண்டவுடன் இயேசு உடனே அவனுடைய பாவத்தை மன்னித்து இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய் என்றார்.

அருமையான குழந்தைகளே, நீங்களும் எந்தவொரு காரியமும் செய்யும் போது நம்முடைய பாவச் செயல்களுக்குத் தேவனிடம் மன்னிப்புக் கேட்டு, இனிமேல் சரியானதைத்தான் செய்வேன் என்று உறுதியாயிருந்தால், உலகத்திற்கு வெளிச்சமாயிருக்க முடியும். இப்புதிய ஆண்டில், நீங்கள் உங்களை இப்படியாக மாற்றிக் கொண்டு அன்புடன் கூடிய நல்ல பிள்ளைகளாக மாறுவீர்கள் என நம்புகிறேன்.

அதிக அன்புடன்
ப்ரைசி அக்கா! ✝

## சிறுவர்களுக்கான வேத வினா ( படிக்க அப் . 5:1-11)

1. இயேசுவுக்கு இருபுறமும் எத்தனை கள்வர்கள் சிலுவை யிலறைபட்டார்கள்?

2. இவர்களில் எத்தனை பேர் அவருடன் பரதீசில் போய் சேர்ந்தனர்?

3. ஏன் இயேசு சிலுவையிலறையப்பட்டார்?

4. இயேசு எங்கே சிலுவையிலறையப்பட்டார்?

5. உன்னை நீயே இரட்சித்துக்கொள் ஏற்று இயேசுவைக் கேட்டது யார்?

### சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | |
|---|---|
| B. பெனிட்டா டென்னி சாரோன் | - காங்கயம் |
| K. ஜேஸ்ஃபர் பிரின்ஸ் | - காங்கயம் |
| சகாய புஷ்பராஜ் | - திருச்சி |
| S. ஜென்சி | - நீலகிரி |
| A. ஜெஷிந்தா | - காங்கயம் |
| P. விண்டா சசி | - சென்னிமலை |
| K. கிங்ஸ்லி ரூபஸ் | - காங்கயம் |

## நாளும் நடப்பும்

- ஈரான் ஏவுகணை தாக்குதலில் உக்ரைன் விமானம் விழுந்து நொறுங்கி 17 பேர் பலி.
- மோட்டார் வாகன விற்பனை இருபது ஆண்டுகள் காணாத சரிவு.
- நிர்பயா குற்றவாளிகள் நால்வருக்கும் பிப்-1 ஆம் தேதி தூக்கு தண்டனை.
- ஆஸ்திரேலிய காட்டுத்தீ காரணமாக பல உயிரினங்கள் அழியும் அபாயம்.
- கொச்சியில் கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட நான்கு அடுக்குமாடி குடியிருப்புகள் தாகர்க்கப்பட்டன.
- இலங்கைக்கு எதிரான இருபது ஓவர் கிரிக்கெட் தொடரை இந்தியா கைப்பற்றியது.

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு...

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன், அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை பிப்ரவரி மாத இதழில்)**

## II இராஜாக்களின் புத்தகத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள் (20-25 அதிகாரங்கள்)

1) வானத்தின் சேனைகளுக்கெல்லாம் பலிபீடங்களைக் கட்டினவன் யார்?

2) கர்த்தரின் ஆலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டது எது?

3) கீதரோன் ஆற்றிற்கு கொண்டுப் போய் சுட்டெரிக்கப்பட்டது எது?

4) ஆகாசுடைய மேல் வீட்டில் இருந்தது என்ன?

5) யூதாவின் ராஜாக்கள் சூரியனுக்கென்று வைத்திருந்தவைகள் யாவை?

6) மனுஷரின் எலும்புகள் எங்கே சுட்டெரிக்கப்பட்டது?

7) எகிப்தின் ராஜாவின் பெயர் என்ன?

8) சிதேக்கியாவின் இயற்பெயர் என்ன?

9) பாபிலோன் ராஜாவின் காவல் சேனாபதியின் பெயர் என்ன ?

10) சாலமோனுடைய ஆலயத்தின் தூணின் உயரம் எவ்வளவு?

## டிசம்பர் மாத வினாக்களுக்கான விடைகள்

1. **அத்தாலியாள்** (11:1)
2. **பாகாலின் கோவிலை** (11:18)
3. **ஏழு** (11:21)
4. **யோவேலின் குமாரன் அமத்சியா** (12:21)
5. **அசரியா** (14:21)
6. **தாவீதின் பட்டணத்திலே** (15:38)
7. **ஒன்பது வருஷங்கள்** (17:1)
8. **தன் தகப்பனாகிய தாவீது** (9:25)
9. **தன் வஸ்திரங்களை கிழித்து இரட்டு உடுத்திக் கொண்டு** (19:1)
10. **பானபாத்திரக்காரன்** (18:17)

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| ஜெனிபர் சுரேஷ் | - | கேத்தி, பாலடா |
| T. கலையரசன் மோகன்தாஸ் | - | தோளூர்பட்டி, திருச்சி |
| M. செல்வம் | - | வடவள்ளி |
| K.S. மாணிக்கவாசகம் | - | திருச்சி |
| சுந்தரி | - | சென்னிமலை |
| ஆலிஷ் | - | மதுரை |
| தே. தனம் பேன்ஸி | - | கள்ளக்குறிச்சி |
| J. ரெபேக்காள் ஜேசுராஜ் | - | மணப்பாறை |
| S. சாம் பிரபுதாஸ் | - | திருச்சி |
| S. ஜெயராஜ் | - | ராமநாதபுரம், கோவை |
| G. பாக்ய சம்பூரணம் | - | ஈரோடு |
| Mrs. மேரி ஜெபராஜ் | - | மதுரை |
| கிறிஸ்டோபர் | - | சென்னை |
| சங்கீதா | - | காங்கயம் |
| M.D. ரவிச்சந்திரன் | - | சென்னை |
| C. அருள்ராஜ் | - | சென்னை |
| P. ஜெயக்குமார் மாலதி | - | மூலனூர் |
| Mrs. ஜெயமணி ஜெயபாஸ்டியன் | - | கடலூர் |
| S. ஜமுனா | - | திருப்பூர் |
| சங்கீதா | - | சென்னை |
| செல்வமணி குணசேகரன் | - | சென்னை |
| பாலாமணி | - | காங்கயம் |

# தேவன் அநீதியுள்ளவரல்லவே!

Bro. பென்னி மார்டீன்

**பி**ரியமான திருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். பல வேளைகளில் தேவனுடைய பண்புகளைப் பார்த்து நாம் பரவசமடைகிறோம், அமர் அன்பானவர், இரக்கமுள்ளவர், தயவுள்ளவர், நீடிய பொறுமையுள்ளவர் என பட்டியல் நீண்டு கொண்டேயிருக்கும். அவைகளுள் பலரை வெகுவாக கவர்ந்த பண்பு அவர் நீதியுள்ளவர் என்பதாகும், அநீதி நிறைந்த இவ்வுலகில் பாதிபேர் அநீதிக்கு துணைப் போகிறதையும் மீதிபேர் சுயநலவாதிகளாகவும் இருப்பதையும் நாம் காணமுடியும். நீதியரசர்கள் என்று மக்களால் மதிக்கப்படுகிறவர்கள் கூட மதிகெட்டுப் தீர்ப்பு வழங்குவதை, தீர்க்கமாய் நாம் காணமுடியும். அப்படிப்பட்ட நேரங்களில் நீதி நீர்த்துப்போய் விட்டதோ? அநீதிதான் நீளுமோ? எனும் பயம் பலரை பற்றிக் கொள்கிறது. ஆனால் தேவனுடைய பிள்ளைகளுக்கு உள்ளபடியே அதைப்பற்றி கவலை எள்ளளவும் இருக்க வேண்டிய அவசியமில்லை, ஏனென்றால் நம் தேவன் அநீதியுள்ளவரல்லவே, இப்பாழாய் போனப்பாரில் இது நமக்கு ஆறுதலையும், தேறுதலையும் நிச்சயமாகத் தருகிறது.

தேவன் அநீதியுள்ளவரல்லவே என்னும் சொற்றொடர் சொற்ப எழுத்துக்களைக் கொண்டிருந்தாலும் ஆழமான அர்த்தங்களை தன்னகத்தேக் கொண்டுள்ளது. இச்சொற்றொடர் எபிரெயர் 6:10 ல் இடம்பெற்றுள்ளது. எபிரெயர் 6:10ல் தேவ ஆவியினால் ஏவப்பட்ட எழுத்தாளர் உற்சாக மூட்டும் வார்த்தைகளை பதிவு செய்திருக்கிறார் **ஏனென்றால் உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான் களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே.** அருமையானவர்களே இந்த நிரூபம் யாருக்கு எழுதப்பட்டதோ அவர்கள் உற்சாகமிழந்து சோர்வாகக் காணப்பட்டார்கள். முன்பு இதே அதிகாரத்தில் இந்நிரூப்பத்தின் ஆசிரியர் விழுந்து போவதின் ஆபத்தை குறித்து தத்ரூபமாக எழுதியிருக்கிறார். பின்பு ஒன்பதாம் வசனத்தில் அவர்கள் உண்மையாக தொடர்ந்து வாழ்வார்கள் என்று தன்னுடைய நம்பிக்கையை வெளிப்படுத்தி. இந்த உற்சாக மூட்டும் வார்த்தைகளை அவர் எழுதினார். இவ்வார்தைகள் நம்மையும் உண்மையாக உற்சாக மூட்ட வேண்டும். ஏனென்றால், அவைகள்

தேவனுடைய உண்மைத்தன்மையை நமக்கு நினைப் பூட்டுகின்றன. இவ்வார்த்தைகளை நாம் சுருக்கமாக சிந்தித்துப் பார்ப்போம்.

**தேவன் அநீதியுள்ளவரல்ல என்று நாம் நிச்சயித்துக் கொள்ள முடியும்**

இன்றைய நாட்களில் அநீதி இவ்வுலகில் முன்னெப்போது மில்லாததை விட பெருகியிருக்கிறது. அநியாயமும் அக்கிரமமும் எங்கும் தங்குதடையின்றி அரங்கேறிவருகிறது. இவைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் உலகத்தின் மக்கள் கடவுள் எப்படி இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறார்? என்று புலம்புகிறார்கள். ஆனால் தேவன் எல்லேரையும் ஒருநாள் பிடிப்பார், எல்லேரையும் மிகச்சரியாக நியாயம் விசாரிப்பார் நீதி செய்வார் என்பதை அறியாதிருக்கிறார்கள். தேவன் தம்முடைய மனதை மாற்றுவதில்லை, அல்லது தம்முடைய வாக்குதத்தங்களை ரத்து செய்வதுமில்லை தேவன் மனிதனிடமிருந்து மாறுபட்டவராய் எப் போதுமே தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார். மனி தன் தன் மனதை மூன்று காரணங்களுக்காக மாற்றுகிறான். நம்மால் வருங்காலத்தை முன்னறிவிக்க முடியாத காரணத்தால் சில சமயங்களில் நாம் புதிய சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டிய தாயிருக்கிறது. ஆனால் தேவன் எதற்காகவும் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை சில வேளையில் நம்முடைய திட்டங்கள் நம்மைவிட வலிமை வாய்ந்த ஏதோ ஒன்றால் அல்லது யரோ ஒருவரால் தடை செய்யப்படுகிறது. ஆனால் தேவனைவிட வலிமை வாய்ந்த சக்தி இவ்வுலகில் எதுவுமில்லை. எனவே இது தேவனுக்குப் பொருந்தாது. மூன்றாவது மனிதன் தன்னுடைய பொருளைசையினால் அதிக லாபத்திற்கு ஆசைப்பட்டு தன் மனதை மாற்றுகிறான் இதுவும் தேவனுக்குப் பொருந்தாது, அதனால் தான் மோசே எண்ணாகமம் 23:19ல் தேவனைப் பற்றி இவ்விதமாகச் சொல்லுகிறார் பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல, மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல அவர் சொல்லியும் செல்யாதிருப்பாரோ? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? மேலும், சங்கீதக்காரன் இவ்விதமாக எழுதினார். **என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதையும் மாற்றாமலும் இருப்பேன் (சங்கீதம் 89:34). தேவன் நாம் அவரை முழுமையாக நம்பமுடியும் என்பதை நாம் அறிய விரும்புகிறார்** (எபிரெயர் 6 : 13-18).

**மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே**

இவ்வாக்கியம் காரியங்களை அலட்சியப்படுத்துவது என்னும் பொருளைக் கொண்டுள்ளது. மனிதனுக்கு மறதி என்பது

இயல்பாகவே இருக்கிற படியால் அவனுக்கு சில காரியங்களை நினைவூட்டுவது அவ்வப்போது அவசியமாகிறது. மனிதன் மறப்பது மட்டுமல்ல தான் செய்ய வேண்டியது என அறிந்த காரியங்களையும் செய்யாமல் அலட்சியமாயிருக்கிறான். இக்கருத்தை நாம் எபிரெயர் புஸ்தகத்திலும் காணமுடியும். இந்த கிறிஸ்தவர்கள் தங்கள் இரட்சிப்பைக் குறித்து கவலையில்லாமல் இருந்தமைக்காக எச்சரிக்கப்பட்டார்கள் [எபிரெயர் 2:3] அவர்களுடைய அலட்சியப் போக்கினால் அவர்கள் வளர வேண்டிய அளவுக்கு வளரவில்லை [5:12]. அவர்கள் அந்நியரை உபசரிப்பதில் அலட்சியம் காட்டக்கூடாது என்றும் உற்சாகபடுத்தப்பட்டனர் [13:2] இருந்தபோதிலும் தேவன் ஒருபோதும் ஒன்றையும் மறப்பதில்லை. தேவன் அன்பின் சிறிய செயல்பாடு களை கூட கணக்கில் வைத்துக் கொள்கிறார் எதையுமே அவர் மறப்பதில்லை உதாரணமாக அவருடைய நாமத்தில் ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தால் கூட அதையும் தேவன் கணக்கில் வைத்துக்கொள்கிறார் [மத்தேயு 10:42]. அது மாத்திரமல்ல, தேவன் எப்போதுமே தம்முடைய வாக்குதத்தத்தை நிறைவேற்றுவதில் அலட்சியம் செய்வதே இல்லை. இந்த உண்மை ஏசாயாவால் அவர் தேவனை ஒரு தாயோடு ஒப்பிடும்போது வலியுறுத்தப்படுகிறது. ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை[ஏசாயா 49:15].

அதேநேரத்தில் தேவன் சில காரியங்களை மறக்கவும் செய்கிறார். உதாரணமாக தேவன் நம் கடந்த கால பாவங்களை மறந்துவிடுகிறார். நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப் போடுகிறேன் என் பாவங்களை நினையாமலும் இருப்பேன் [ஏசாயா 43:2]. எபிரேயர் 2:12 ல் இதன் ஆசிரியர் எரேமியா 31:34-யை மேற் கோள்காட்டுகிறார்'' அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகவே தேவன் பாவங்களை மன்னிக்கும் போது அந்த பாவங்கள் காணாமல் போய் விடுகின்றன. இது பெரும்பாலும் மனித பழக்க வழக்கங்களிலிருந்து பெரும்பாலும் மாறுபடுகிறது. ஷேக்ஸ்பியர் ஒருமுறை அவ்விதமாக எழுதினார். மனிதர் செய்யும் தீமை அவர்களுக்குப் பிறகும் வாழ்கிறது, ஆனால் நன்மை மனிதர்களுடைய எலும்புகளோடு பெரும்பாலும் பின்னிப் பிணையப் பட்டிருக்கிறது தேவன் நம்முடைய நற்கிரியைகளை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்கிறார். ஆனால், நம் பாவங்களை மறந்துவிடுகிறார். என்ன ஓர் ஆசிர்வாதம் இது!

### நம் அன்பின் பிரயாசத்தை மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே

இது கைம்மாறு கருதாமல் அன்பின் நிமித்தமாக செய்யப்படும் கிரியைகளாகும். இது கிறிஸ்த்துவுக்காக காட்டப்படும்

அன்பாயிருந்தாலும் கூட கிரியைகள் தேவையிலிருக்கும் சக கிறிஸ்தவர்களுக்கு செய்யப்படுகிறது. ஒருவர் சக பரிசுத்தவனை விசாரிக்கிறவராகயிருந்தால் அவர் கிறிஸ்துவை விசாகிக் கிறவராயிருக்கிறார் (மத்தேயு 25:40). இங்கே கிறிஸ்தவர்கள் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஒருவர் பரிசுத்த வானாக மாறுவதற்கு சாக வேண்டியதில்லை இன்னும்சொல்லப் போனால் பரிசுத்தவான் என்னும் பதம் அதீதபக்தியுடைய ஆவிக்குரிய நபரையும் குறிக்காது. எல்லா கிறிஸ்தவர்களும் பரிசுத்த வான்களையாயிருக்கிறார்கள், அதாவது தேவனுடைய சேவைக்காக பரிசுத்தமாக்கப்பட்டு, பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த கிறிஸ்தவர்கள் கடந்தகாலங்களில் அன்பின் பிரயாசங்களை வெளிபடுத்திக் கொண்டிருந்தார்கள், அவர்களுக்கு உற்சாக மூட்டும் வார்த்தைகள் அவசியமாயிருந்தது, அவர்களுடைய பிரயாசம் விருதாவாகவில்லை என்பதை நினைப்பூட்டும் வார்த்தைகள் அவசியமாயிருந்தது.

சக கிறிஸ்தவர்களிடத்தில் அவர்கள் காட்டிய அன்பை தேவன் எப்போதுமே நினைவில் வைத்துக் கொள்வார். தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்கு தம்முடைய வல்லமையை மையை விளங்கப்பண்ணும் படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது. (II நாளாகமம் 16:9) கொர்நேலியு தான் இரட்சிக்கப்படாத நிலையிலும் தேவனைப் பிரியப்படுத்த அவர் கொண்டிருத்த ஆசையை தேவன் கவனித்தார், அப்படியிருக்கும்போது அவருடைய பிள்ளைகள் எடுக்கும் முயற்சியை அவர் எந்த அளவு கவனிப்பார்? இவ்வார்த்ததைகள் நம்மையும் கூட உற்சாகப்படுத்த வேண்டும். நாம் கர்த்தருக்காகப் படுகிற பிரயாசங்களுக்கு பலன் இன்னும் கிடைக்கவில்லையே என்று நாம் சில வேளைகளில் சோர்வடைவது உண்டு. நம் பிரயாசங்களை யாராவது கவனிக்கிறார்களா என்று பல வேளைகளில் நாம் நினைப்பதுண்டு. மனிதன் நினைக்காமல் இருக்கலாம் ஆனால் தேவன் எல்லாவற்றையும் கண்டு, நம்மை விசாரிக்கிறார் என்று நாம் நிச்சயபடுத்திக் கொள்ளலாம். ✝

## அடிமைத்தனம்

**ரோமர் ஆறாம் அதிகாரம் அடிமைத்தனத்தின் வேறுபக்கத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. இந்த அதிகாரத்தின் பவுல் நம் வாழ்க்கையின் ஏதோ கட்டத்தில் நாம் பாவத்திற்கு அடிமைப்பட்டிருந்ததை பற்றி பேசுகிறார். நாம் நம் ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அடிமைகளானதால் துன் மார்க்க எஜமானாகிய சாத்தானிடமிருந்து நமக்கு விடுதலை கிடைத்தது.**

# வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்

K.M. பிலிப்

**அ**ன்பான திருமறை ஆசான் வாசகர்களுக்கு நல்மீட்பர் இயேசுவின் நாமத்தின் புத்தாண்டு வாழ்த்துக்கள். ஒவ்வொரு 365 1/4 நாட்களுக்குப் பின்பு வருடங்கள் மாறிக் கொண்டே இருக்கின்றன. ஆனால், நாம் ஆராதிக்கிற ' தேவனோ 'மாறாதவராயிருக்கிறார். அவரது ஆண்டுகள் முடிந்து போவதில்லை. (சங் 102:27) இதுவே நம் பெலன். ஒவ்வொரு 365 1/4 நாட்களுக்குப் பின்பு ஒரு புதிய வருடம் தோன்றும். உலகத்தாருக்கு அந்த ஒரு நாள் மட்டுமே மகிழ்ச்சி. ஆனால், தேவனுடைய மக்களாகிய நாம் வருஷந்தோறும் மகிழ்ச்சியாய் இருக்கவேண்டும் என்பதே நம்மை படைத்த தேவனுடைய விருப்பம். இதை தேவனுடைய இருதயத்திற் கேற்றவனான தாவீது **வருஷத்தை உம்முடைய நன்மையால் முடி சூட்டுகிறீர்** என்று தன் அனுபவத்தில் சொல்கிறார் ( சங் 65:11 ). கழுதையைத் தேடி அதன் பின்னாகத் திரிந்த சாதாரண மனிதன் சவுலுக்கு தேவன் முடிசூட்டின நாளிலிருந்து அவன் ராஜாவாக அங்கீகாரம் பெற்றான். இப்பொழுது ராஜா விரும்பியது குறைவின்றி ஆண்டு முழுவதும் கிடைத்தது. நாமும் கூட ராஜரீகமான ஆசாரியக் கூட்டம். தேவனால் முடி சூட்டப்பட்டவர்களாகிய நம் வாழ்க்கையில் வருடம் முழுவதும் நன்மை என்பதே உண்மை. நன்மை இருக்குமிடத்தில் துக்கத்திற்கு கண்ணீருக்கு இடமில்லை. 7 – நாளும் சந்தோஷமே ( லேவி 23:40) கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே நம் பெலன் ( நெ.8:10) நன்மையினால் நம் வாயைத் திருப்தியாக்குவதே தேவனுடைய விருப்பம் (103:5). ஆம், வாய் நிரம்பினால் வயிறு நிறையும்; வயிறு நிறைந்தால் மனசு நிறையும். ஒரு 3– வேளை மட்டுமல்ல 365 x 3 – 1095 வேளையும் 2020 ஆம் வருடம் முழுவதும் தேவன் நம்மை நம்மை நன்மையால் நிரப்பப் போகிறார்.

நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது என்று பரிசுத்த ஆவியானரும், பரத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக் கொள்ளமாட்டான் என்று யோவான் ஸ்நானகனும் (யோ 3:27), திட்டமாய் கூறியுள்ளார்கள். இதே, உண்மையை **பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது** என்று தாவீது அனுபவப்பூர்வமாகக் கூறுகிறார். அன்பானவர்களே! தேவன் கொடுக்கும் பொழுது அது எப்பொழுதும் நிறைவானதும், திருப்தியானதுமாயிருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. நம் தேவன் பொய்யுரையாத தேவன். அவர், தன் ஜனமாகிய இஸ்ரவேலரை 40 ஆண்டுகள் ஒரு குறைவுமின்றி வனாந்தரத்திலே திருப்தியாய் நடத்தினவர் (அப் 4:17). நாமும் அவருடைய ஜனங்களாக அநேக வருடங்களைக்

கடந்திருக்கிறோம். நம் நிலை என்ன? தேவனுடைய வாக்குகள் நம்மில் நிறைவேறியுள்ளதா? ஒவ்வொரு வருடமும் தேவ நன்மையால் முடிசூட்டப்பட்டிருக்கிறோமா? எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருப்பதே நம் பெலனாயிருக்கிறதா? 1095 வேளைகளும் நன்மையால் நம் வாய்கள் (மனசு) நிரப்பப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால் இன்று தேவ ஆரோசனையை உற்றுக் கவனிப்போம். நன்மைகளைப் பெற்று அனுபவிப்போம்

**I. ஆலோசனை- கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது**

தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள் என்பது இயேசுவானவர் நமக்குக் கொடுத்த வாக்கு (மத் 7:7). அதனால் தான், **முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தை (சபையை)யும் அவருடைய நீதியையும் தேடுங்கள்.** அப்பொழுது இவைகளெல்லாம் கூடக் கொடுக்கப்படும் என்று வழியையும் காட்டியுள்ளார் (மத்: 6:33). இந்த உண்மையை ருசி பார்த்த ஆதி திருச்சபையார் சபைக்காக எல்லாவற்றையும் விற்று அப்போஸ்தலர் பாதத்தில் வைத்து விட்டார்கள். ஆனாலும், அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை என்று (அப் 4:32 –35)பரிசுத்த ஆவியானவர் சாட்சி கூறுகிறார். நாமும் சபையாகக் கூடுவதோடு, சபை வளர்ச்சியிலும் நாட்டம் செலுத்துவோமானால் நம்மீது தேவன் நாட்டம் கொண்டு நன்மையால் முடி சூட்டுவார். மேலும், தீமையை விட்டு விலகி நன்மை செய்து, ஜெபித்து அதிகாலையில் தேவனைத் தேடுவோம் (63:1) அப்பொழுது நிறைவான நன்மைகளால் முடி சூட்டப்படுவோம்.

**II. ஆலோசனை கர்த்தருக்கப் பயப்படுகிறவர்களுக்கு நன்மை உண்டு**

இந்நாளில் இருக்கிறது போல் நம்மை இவர் உயிரோடே காப்பதற்கும், எந்நாளும் நன்றாயிருக்கிறதற்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து இந்த எல்லாக் கட்டளைகளின் படியும் செய்யக் கர்த்தர் நமக்கு கட்டளையிட்டார் (உபா6:24)கர்த்தருக்குப் பயப்படுதல் என்பது அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதாகும். இது தேவவார்த்தை என்ற நடுக்கம் வேண்டும் (ஏசா 66:5). இன்றைய கிறிஸ்துவ மத உலகில் தேவவசனத்தை தான்தோன்றித்தனமாக மாற்றி, கூட்டி, கழித்து, மிஞ்சி செயல்படுகிறவர்களுக்கு எப்படி நன்மை கிடைக்கும்? என் வசனத்திற்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்பேன் (ஏசா 66:2) என்கிறார். அவர் நம்மை நோக்கிப் பார்த்தால் எல்லாம் நன்மையே கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தின் ஆரம்பம் (நீதி 1:7). இந்த ஞானம் இல்லாததால் தான் உலகம் சீரழிந்து போய்க் கொண்டிருக்கிறது. தீமையை வெறுப்பது கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் என்பதை உணர்ந்து, நம்மை விட்டு தீமையை அகற்றிவிட்டால், எல்லாம் நன்மையே (நீதி 8:13). இப்படி கர்த்தருக்குப் பயப்படுகிறவன் வேறெதற்கும் பயப்படத் தேவையில்லை. பயம் இல்லையென்றால் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சிதான். **கர்த்தருக்குப் பயப்படு கிறவனுக்கு திடநம்பிக்கை உண்டு** (நிதி 14:26). மரணக் கண்ணிக்குத் தப்பலாம். ஆயுள்

நாட்களை பெருகப்பண்ணும் [நீதி 10:27] நீடித்த நாட்களாய் திருப்தியாயிருப்பபான். ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையாலும் கிருபையாலும் முடி சூட்டப்படுவோம். பிரியமானவர்களே! அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின் படி செய்து அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு அவர்களை இரட்சிக்கிறார் [சங் 145:19] கொர்நெலியு தேவபக்தியுள்ளவனும், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனாயிருந்ததால், அவன் ஜெபத்தைத் கேட்ட தேவன் அவனையும், குடும்பத்தையும் முடி சூட்டினார் [அப்:10:2] நாமும் கர்த்தருக்குப் பயப்படும் பயப்த்தோடு அவருடைய கற்பனைக ளின் படி செய்வோம். வாழ்நாள் முழுவதும் நாமும் நம்மைச் சார்ந்தவர்களும் வாழ்ந்து சுகித்திருப்போம்.

III ஆலோசனை கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள், நன்மையால் முடிசூட்டப்படுவார்கள் (சங்:37:9)

இன்று அநேகருடைய நிலை, ஜெபித்ததும் பலன் கிடைக்கவேண்டும் என்பதாகும். பொதுவாக, எந்த ஒரு நன்மையும் காத்திருந்து பெறுவதில் தான் நீடித்த மகிழ்ச்சியாயிருக்கும். திருமணமாண ஒரு பெண் 10 மாதம் காத்திருந்தால் தாயாகும் பாக்யம் கிடைக்கும். பிள்ளை 15,20 வருடங்கள் காத்திருந்தால் தான் பட்டம், பதவி பெறமுடியும். ஆம், **உன்வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிரு அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்** [சங் 37:5] **யோசேப்பு 17-வயதில்** தேவனுடைய ஆசீர்வதமான வாக்கைப் பெற்றான். அதைப் பெற்றுக் கொள்ள விசுவாசத்தோடு, பாவத்திற்கு விலகி நன்மை செய்து 13 [ 17 -30 ] வருடங்கள் காத்திருத்தான். யோசேப்பை தேவன் உயர்த்திய பொழுதோ [110-30=80] 80 ஆண்டுகள் குடும்பமாய் பூரண மனமகிழ்ச்சியோடு தேசத்தின் நன்மைகளை புசித்துத் திருப்தியாய் வாழ்ந்தான் [ஆதி 39-50] நாமும் ஜெபிப்போம். ஆனாலும் இயேசுவைப் போல தேவசித்ததிற்கு ஒப்புக் கொடுத்து, தேவ சித்தத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுவோம். கிறிஸ்து மரணத்தை ஜெயித்த ஜெயவீரராய் திகழ்வதுபோல் நாமும் வாழ்நாள் முழுவதும் வெற்றி வீரர்களாய் முடி சூட்டப்படுவோம்

மேலும் **உத்தமமாய் நடப்பவர்களுக்கு கர்த்தர் நன்மைகளை வழங்காதிரார்** [சங் 84:11] நோவாவின் உத்தமமான வாழ்க்கையால், உலகமே நீரால் அழிந்தபோதிலும், தேவன் நோவாவையும், அவன் குடும்பத்தையும் காப்பாற்றி நன்மை செய்தார். உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதம் பெறுவான் [நீதி 28:20] என்று தேவன் வாக்குக் கொடுக்கிறார். நாமும் நமக்கு நாமே நல்மனசாட்சியோடு உண்மையாயிருப்போம் [1 தீமோ 1:18]. வீட்டில், சபையில், சமுதாயத்திற்கு முன் உண்மையாயிருப்போம். தேவன் ஆவியா யிருக்கிறார் அவரைத் தொழு கொள்ளுகிற நாம் ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்வோம் [யோவான் 4:24]. அப்படி உண்மையாய் நடப்பவர்களோ அவருக்குப் பிரியம் [நீதி 12:22]. அப்பொழுது, தேவன், பிரியமானவனே, **நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு என்று வருடத்தை நன்மையால் முடிசூட்டுவார்**. ஆமென். ✝

# கிறிஸ்து என்னும் மார்க்கம்

J. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார்

## இயேசு கிறிஸ்து என்னும் தேவன்

அன்பானவர்களே இயேசுகிறிஸ்தானவர் தேவனுடைய குமாரன் மட்டுமே, அவர் தேவனல்ல என்று சிலர் கூறுகிறார்கள்.

A. ஆனால் வேதாகமம் பிதா எப்படி தேவனாயிருக்கிறாரோ அது போல கிறிஸ்துவும் தேவனாயிருக்கிறார் என்று உறுதி செய்கிறது.

இதற்கான வேத வசனங்களை கவனிப்போம்:

1. ஏசாயா 9:6–ல் இயேசுவானவருக்கு அநேகப் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் ஒரு பெயர் அவர் வல்லமையுள்ள தேவன் என்பதாகும்.

2. அப். யோவான், தான் எழுதிய கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு புத்தகத்தை ஆரம்பிக்கும்போது, யோவா. 1:1–ல் அந்த வார்த்தை தேவனாயிருந்தது என்று ஆரம்பிக்கிறார். இயேசுவானவர் மாம்சத்தில் வருவதற்கு முன்பு அவர் பிதாவாகிய தேவனோடு, வார்த்தையாகிய தேவனாயிருந்தார் என பதிவு செய்திருக்கிறார்.

3. யோவா.20:28–ல், அப்போஸ்தலனாகிய தோமா இயேசுவை நோக்கி என் ஆண்டவரே! என் தேவனே! என்கிறார்.

4. எபி 1:9–ல் (சங்.45:7) பிதாவாகிய தேவனே தன் குமாரனான, வார்த்தையை நோக்கி தேவனே என்று அழைக்கிறதை கவனிக்க முடியும்.

5. அப். 20:28–ல் **தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபை** என பதிவு செய்யப்பட்டுள்ளது. நமக்குத் தெரிந்தவரை பிதாவாகிய தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் என எழுதப்பட்டுள்ளது. இதுவும் இயேசு கிறிஸ்துவையே தேவன் எனக் கூறுகிறது.

6. 1தீமோ. 3:16–ல் தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் என எழுதப்பட்டுள்ளது. இதுவும் இயேசு கிறிஸ்துவையே குறிக்கிறது.

7. ரோம 9:5–ல் இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான **தேவன்** என பவுல் எழுதினார். இந்த வசனம் பிதாவைக் குறிப்பிடுகிறது என கூறுவர். ஆனால், கூர்ந்து அர்த்தத்தோடு வாசித்தால் இந்த வசனம் கிறிஸ்து வைப் பற்றினது என்பது விளங்கும். ஒரு சிலர் இயேசு கிறிஸ்துவை ஸ்தோத்திரத்துக்கு பாத்திரர் அல்ல. இயேசு கிறிஸ்துவின் மூலமாக பிதாவை ஸ்தோத்திரிக்க வேண்டும் என்பதைத் தவிர இயேசு கிறிஸ்துவை ஸ்தோத்திரிக்கக் கூடாது என்பர். ஆனால், வெளி.5:12–ல் ஆட்டுக் குட்டியானவர் (இயேசு கிறிஸ்து) ஸ்தோத்திரத்தைப் பெற்றுக் கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று உறுதி செய்கிறது. ஆகவே, கிறிஸ்து, ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனாக இருக்க முடியும். அதே வேளையில், கிறிஸ்து பிதாவுக்கு மேலானவர் அல்ல, பிதாவே எல்லாவற்றிற்கும் மேலானவராக அதாவது கிறிஸ்துவுக்கும் தலையாயிருக்கிறார்.1 கொரி.11:3. என்று வேதம் கூறுகிறது.

8. இதுபோலவே, சிலர் 1யோவா. 5:20–ல் சொல்லப்பட்ட இவரே மெய்யான தேவன்' என்பதிலும் குழம்புகிறார்கள். ஆனால், இந்த வசனத்தையும் நாம் கவனத்தோடு படித்தால் இந்த வசனமும் கிறிஸ்துவைப் பற்றித்தான் சொல்லப் பட்டுள்ளது என புரிந்து கொள்ளலாம்.

9. தீத். 2:13–ல் மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய' என பவுல் தெளிவாகக் குறிப்பிடுவதின் மூலம் அவர் ரோமர் 9:5–ல் எழுதியதை சந்தேகிக்க முடியாது.

இத்தனை வசனங்கள் இயேசு கிறிஸ்துவை 'தேவன்' என்று சொல்லியிருக்க, அவர் தேவன் இல்லை, தேவனுடைய குமாரன் மட்டும்தான் என்று வாதம் செய்வது தவறான சிந்தையாகும்.

**B. ஒரு பிரிவினர் கூறுவது போல் இயேசு கிறிஸ்து ஒரு சிருஷ்டிக்கப்பட்ட ஒருவரா?**

1. ஒரு சில வசனங்கள் தவறாக புரிந்து கொள்ளப்பட்டதினாலே கிறிஸ்துவை சிருஷ்டிக்கப்பட்டவராக ஒரு சிலர் போதிக் கிறார்கள். அவர்களுடைய போதனை என்னவென்றால்: பிதாவாகிய தேவன் இயேசு கிறிஸ்துவை முதலாவது படைத்தார். அதாவது, சிருஷ்டித்தார் என்றும் அதன் பிறகு இயேசு கிறிஸ்துவைக் கொண்டு சகலத்தையும் படைத்தார் என்பது ஆகும். இந்த விஷயத்தில் அவர் (கிறிஸ்து)

சிருஷ்டிக்கப்பட்டவரானால் அவரே சிருஷ்டிகராக தேவனோடு இருப்பது எப்படி? இதைப்பற்றின வசனங்கள் கூறுவது என்ன?

2. சங்.2:7–ல் சொல்லப்பட்டுள்ள ''நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்'' என்கிற இந்த வசனப் பகுதியை அவர்கள் எடுத்து : பிதாவாகிய தேவன் குமாரனான இயேசுவைப் பெற்றார். இயேசுதான் சிருஷ்டிப்பின் முதல் நபர் என்று ஒரு தவறான அர்த்தத்தை சொல்லுகிறார்கள்.

3. ஒரு வசனத்திற்கு அர்த்தம் சொல்ல வேண்டுமானால் வேதத்திலே தேடிப்பார்க்க வேண்டும் என்று தேவன் நம்மை உற்சாகப்படுத்துகிறார். ''கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்'' ஏசா.34:16.

4. ஆகவே, ஒரு வசனத்திற்கு விளக்கம் சொல்லும்போது நாம் அதற்கு இணையான வசனம் வேறு எங்காகிலும் வேதத்தில் உள்ளதா என ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். அதுபோல, சங். 2:7–க்கு விளக்கம் சொல்ல வேண்டுமானால் அப். 13:31–34–ல் இந்த வசனம் இரண்டாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறது என திட்டமாகக் கூறியதுடன், இது தாவீது எழுதின சங்கீதம் எனவும் உறுதிப்படுத்துகிறது. ஏனென்றால், சங்கீத புஸ்தகத்திலே இது தாவீதின் சங்கீதம் என்று சொல்லப்படவில்லை. அதோடு, அப். 13–ம் அதிகாரத்துடன் ஒப்பிட்டு பார்க்கும்போது இதன் விவரம் அறியலாம்.

5. இன்று–நான்–உம்மை ஜநிப்பித்தேன் என்கிற நான்கு வார்த்தைகளில்: இன்று என்பது கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள்; நான் என்பது பிதா; உம்மை என்பது இயேசு கிறிஸ்து; ஜநிப்பித்தேன் என்பது மரணத்திலிருந்து அழிவுக்குட்படாத உயிர்த்தொதலைக் கொடுத்தேன் அல்லது உயிர்த்தெழுப்பினேன் என்பது ஆகும். அப்.13:34; ரோம 6:9. இப்படித்தான் சங்.2:7 ஐ விவரிக்க வேண்டுமே தவிர உலகத் தோற்றத்திற்கு முன்பு பிதாவாகிய தேவன் குமாரரான இயேசு கிறிஸ்துவைப் பெற்றார் என்பது அர்த்தமோ, விளக்கமோ அல்ல.

6. அடுத்தது, நீதி 8-ம் அதிகாரத்தை பயன்படுத்தி அதில் வசனங்கள் 22-30 வரை வாசிக்கும்போது, 22-ல் ஆதியாகக் கொண்டிருந்தார். 23-ல் பூமி உண்டாகும் முன்னும், ஆதி முதற்கொண்டும் அநாதியாய் நான் அபிஷேகம் பண்ணப்பட்டேன். 24-ல் ஜநிப்பிக்கப்பட்டேன். 26-ல் ஜநிப்பிக்கப்பட்டேன். 30-ல் அவர் அருகே செல்லப்பிள்ளை யாயிருந்தேன் என்கிற வார்த்தைகளையும், 1கொரி 1:31- ல் அவரே [இயேசுவே]தேவனால் நமக்கு ஞானமும்.... ஆனார் என்கிற வசனத்தோடு ஒப்பிட்டும், கொலோ 2:3 -ல் அவருக்குள் ஞானம்... அடங்கியிருக்கிறது என்கிற வசனங்களை ஒப்பிட்டும், கிறிஸ்துவே ஞானமாயிருக்கிறார் அவரை பிதாவாகிய தேவன் உலக தோற்றத்திற்கு முன் ஜநிப்பித்தார் என்றும் விளக்குகிறார்கள்.

7. ஆனால், நீதிமொழிகள் 8-ம் அதிகாரத்தில் 1முதல்3 வசனங்களை நாம் கவனிக்கும்போது ஞானத்தை **அது** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் என்று சொல்லப்படவில்லை. மாறாக ஆங்கில வேதாகத்தில் HER மற்றும் SHE என்று தான் ஞானம் குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமொழிகள் புத்தகததை எழுதின சாலமோன் ஞானத்தை ஒரு பெண்ணாக உருவகப்படுத்தி அந்த ஞானம் என்கிற பெண் மனிதரை அழைத்து ஆலோசனைகள் சொல்வது போல எழுதி யிருக்கிறார். இயேசு கிறிஸ்துவை பெண்ணாக வேதாகமம் எங்கும் கூறவில்லை.

## கிறிஸ்து நம் ஜீவனாயிருப்பதால்

- **கிறிஸ்துவைப்பற்றி சிந்தித்துக் கொண்டும் தியானித்துக் கொண்டும் இருக்க வேண்டும்.**
- **அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு கீழ்ப்படிய வேண்டும்.**
- **தேவனை நோக்கி தவறாமல் ஊக்கமாக ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும்.**
- **அன்றாட வாழ்க்கையில் பரலோகத்தை அதிகமாக எதிர்பார்க்க வேண்டும்.**

# ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யுங்கள்

Bro. **பாண்டியன்**

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக. தேவக்கிருபையால் உங்களுக்கு இந்த புதிய ஆண்டு ஆசீர்வாதமாய் இருக்க வாழ்த்துகிறேன். ஊழியம் என்ற வார்த்தைக்கு ஆங்கிலத்தில் **சர்வீஸ்** என்ற பதம் சொல்லப்படுகிறது. இது ஒரு கம்பெனியிலோஅல்லது ஒரு நிறுவனத்திலோ அதன் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு ஆண்டுகணக்கில் வேலை செய்வதைக் குறிக்கும். பொதுவாக, சபைக்கு போதித்து வழிநடத்துபவர்களை நாம் சபை ஊழியர் என்கிறோம். கலாத் 5:13 நம் தலைப்புவசனம். அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யுங்கள் என்ற காண்கிறோம். இது விருத்தசேதனத்தை வலியுறுத்திய யூதர்களை கடிந்து கொண்டு கலாத்திய சபையாருக்கு பவுல் கூறியது. சபை விசுவாசிகள் ஒருவருக்கொருவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற அரிய பாடத்தை இந்த வசனம் சுட்டிக் காண்பிக்கிறது.

அப்போஸ்தல உபதேசத்தின் அஸ்திபாரமாகவும் இயேசுக் கிறிஸ்து மூலைக்கல்லாகவும், பரிசுத்த ஆலயமாக எழும்புகிற சபை ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாய் இருக்கிறது. (எபே 2:19-22) இவைகளைக் கருத்தில் கொண்டு நாம் நம் சுயாதீனமாகிய உரிமையை தவறாகப் பயன்படுத்தாமல் மற்றவர் பக்தி விருத்திக்கு ஏதுவாக நடந்துகொள்ளவேண்டும். கிறிஸ்து இந்தச் சிறியரில் யார் ஒருவருக்கும் இடறல் உண்டாக்காமல் நடக்கவேண்டிய பொறுப்புள்ள வாழ்க்கையை நமக்கு உபதேசித்து உள்ளார். கெட்ட பழக்கவழக்கம் உடைய பெற்றோர், பிள்ளைகள் இடறக் காரணமாகிறார்கள். அதைப்போல, விசுவாசிகள் மத்தியில் நாம் செய்யும் தவறுகள், பேச்சு, செய்கைகள் அவர்கள் இடறுவதற்கு காரணமாக அமைவதைக் காட்டிலும் நம் கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி சமுத்திரத்தில் தள்ளுவதே மேல் என்ற எச்சரிக்கை விடுக்கிறார். நம் ஆண்டவர்(மத் 18:6). ஆக, நாம் ஒருவருக்கொருவர் நடந்து கொள்ளது எப்படி என்பதை கவனித்துப் பார்க்கவேண்டும்.

பொய் பேசுவது இன்றைய காலகட்டத்தில் சாதாரணமாக உள்ளது. பழைய ஏற்பாட்டில் பத்துக்கட்டளையில் ஒன்றாக பொய் சாட்சி சொல்லாதிரு என்றும், மேலும் சகரியா 8:16, 17-ல் அவனவன் பிறனுடனே உண்மை பேசுங்கள் என்றும் உள்ளது.

இல்லையேல் தேவனுடைய வெறுப்புக்கு ஆளாக நேரிடும் என பார்க்கிறோம். புதிய ஏற்பாட்டில் தெளிவாக ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள் என காண்கிறோம் கொலே.3:9. அதற்குக் காரணம் நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாய் இருக்கிறபடியால் [எபே 4:25] என்கிறார் பவுல் அப்போஸ்தலன். ஆக, நாம் உண்மையே பேசும் போது ஒருவருக்கொருவர் ஊழியம் செய்கிறோம்.

அடுத்ததாக, ஒருவரோடொருவர் வழக்காடாமல் அநியாயத்தை சகித்துகொள்வது [I கொரி 6:7] மற்றவரோடே வழக் காடுதல் குற்றம் என வேதம் போதிக்கிறது. நீங்கள் அன்பாகவும், உண்மையாகவும் இருக்கும் பட்சத்தில் வழக்காடவேண்டிய அவசியம் இராது. அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும் [நீதி 13:10]. நாம் கிறிஸ்துவின் உபதேசப்படி சாந்தம், மனத்தாழ்மையாய் நடக்க முயற்சிக்கும் போது வழக்காடுதலில் இருந்து தப்பிக்கலாம். ஒன்றையும் வாதினால் செய்யாமல் தாழ்மையினாலே நம்மைவிட மற்றவரை நாம் மேன்மையாக எண்ணவேண்டும். [பிலி2:3] இது கிறிஸ்துவிடம் கற்கவேண்டிய முக்கிய பாடமாகும்.

அதே வண்ணம் ரோம 12:10ல், சகோதர சிநேகத்தில் ஒருவர் மேல் ஒருவர் பட்சமாயிருங்கள் என்ற கட்டளையை பார்க்கிறோம். கனம் பண்ணுவதிலும் முந்திக்கொள்ள வேண்டும். அநேகர் குடும்பத்தில் உள்ள சகோதர சகோதரிகளிடம் **அட்ஜஸ்ட்** செய்வது போல சபை விசுவாசிகளிடம் நடந்து கொள்வதில்லை! இதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். பொதுவாக, மற்றவர் தன்னை மதிப்பதை விரும்புவர்கள் நீங்களும் அப்படியே செய்யுங்கள் [லூக் 6:31] என்ற ஆண்டவர் வார்த்தையை மறந்து விடுகின்றனர். ஆவிக்குரியவர்கள் என்று நாம் நம்மை எண்ணினால் நாம்தான் கனம் பண்ணுவதில் முந்திக்கொள்ள வேண்டும் பெலவீனரைத் தாங்கவேண்டும் என்றும் காண்கிறோம். இதுவே ஒருவருக் கொருவர் ஊழியம் செய்வது.

இன்றைய நாட்களில் விசுவாசிகள் மத்தியிலும் கசப்பு, கருத்து வேறுபாடுகள் பார்க்கிறோம். சகோதரனுக்கு விரோதமாக குற்றப்படுத்துவது வேதத்திற்கு விரோதமானது [யாக் 4:11,12] ஆகையால், கிறிஸ்து நமக்கு மன்னித்தது போல நாமும் மற்றவரை மன்னிக்க கடமைப்பட்டுள்ளோம். தெய்வபயத்தோடே ஒருவருக் கொருவர் கீழ்படியவும் போதிக்கப்பட்டுள்ளோம் [எபேசி 5:21] மனிதருக்கல்ல கர்த்தருக்கே பிரியமாய் ஊழியம் செய்து தேவ ஆசீர் பெறுவோம். தேவக்கிருபையும், சமாதானமும் உண்டாவதாக ஆமென். ✝